## கழகத்தின் கற்கோட்டையாம் புதுக்கோட்டையில் – கழகத் தலைவரின் எழுச்சியுரை கேட்க, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கடல் போல் மக்கள் திரண்டிருக்கும் காட்சி!



## என்.டி.ஏ. எனும் பேரிடரை, பின்வாசல் வழியாக தமிழ்நாட்டுக்குள் கொண்டுவரத்

## தேர்வு செய்யப்பட்டிருக்கும் அடிமைச்சாமிதான், எடப்பாடி பழனிச்சாமி!

# தமிழினத்துக்கும் - தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்வது பா.ஜ.க.வின் வழக்கம்! அதற்குத் துணை போவதுதான் அ.தி.மு.க.வின் பழக்கம்!

## புதுக்கோட்டையில் – கழகக் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்குகள் கேட்டு

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

புதுக்கோட்டை, ஏப். 12

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (11-04-2026) புதுக்கோட்டையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில், "N.D.A. எனும் பேரிடரை, பின்வாசல் வழியாகத் தமிழ்நாட்டுக்குள் கொண்டுவரத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் அடிமைச்சாமிதான் பழனிசாமி" என்றும், "தமிழினத்துக்கும் – தமிழ்நாட்டுக்கும் துரோகம் செய்வது பா.ஜ.க.வின் வழக்கம். அதற்குத் துணை போவதுதான் அ.தி.மு.க .வின் பழக்கம்" என்றும் குறிப்பிட்டார்.**

**கழகத்தலைவர்–முதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

புதுக்கோட்டை - திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை! தொடர்ந்து இரண்டாவது முறையாக தி.மு.க. ஆட்சி அமைக்க - புது வரலாற்றைப் படைக்க புதுக்கோட்டைக்கு வந்திருக்கிறேன்.

புதுக்கோட்டையின் சிறப்புகள் என்ன? குகைக் கோவில்கள், கல்வெட்டுகள், தொல்லியல் சின்னங்கள் என்று, எங்கு பார்த்தாலும் தமிழ்நாட்டின் பண்பாட்டையும் - வரலாற்றையும் சொல்லும் ஊர்தான், புதுக்கோட்டை!

### தாய்த் தமிழைக் காக்க, தங்கள் உயிரையே ஈந்த கீரனூர் முத்து, விராலிமலை சண்முகம்!

புதுக்கோட்டைக்கு என்று பெரிய வரலாறு இருக்கிறது. இங்கு இரண்டு இளைஞர்கள் இருந்தார்கள். கீரனூர் முத்து மற்றும் விராலிமலை சண்முகம்! இன்றைய இளைஞர்கள் அவர்களின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நினைவூட்ட விரும்புகிறேன்.

1965-இல் தாய்த்தமிழைக் காப்பதற்காக தங்களின் உயிரையே தந்த இளைஞர்கள் அவர்கள்! அப்படிப்பட்ட மொழிப்போர்த் தியாகிகளைத் தந்த புதுக்கோட்டைக்கு வந்திருக்கிறேன்.

தமிழுக்கு மீண்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசால் ஆபத்து வந்திருக்கிறது. அந்த பா.ஜ.க.வையும் – அவர்களைத் தூக்கிச் சுமக்கும் அடிமை அ.தி.மு.க.வையும் வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்த உங்கள் ஆதரவைக் கேட்டு வந்திருக்கிறேன்.

### தமிழ்நாட்டுக்கு எது தேவை? மக்களாட்சியா? சர்வாதிகாரமா?

இந்தத் தேர்தல் என்பது, எதற்கான தேர்தல்? இந்தத் தேர்தலில் வெல்லப்போவது யார், தமிழ்நாடா? டெல்லியா? தமிழ்நாட்டுக்கு எது தேவை? மக்களாட்சியா? சர்வாதிகாரமா? இதை நீங்கள், ஏப்ரல் 23 அன்றைக்கு ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் காட்ட வேண்டும்; நிரூபிக்க வேண்டும்!

அதற்கு வேட்பாளர்களை உங்கள் அனுமதியோடு அறிமுகப்படுத்தலாமா?



### மிக நீண்ட அரசியல் வரலாறு கொண்டவர் அமைச்சர் ரகுபதி!

முதலில், திருமயம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் அமைச்சர் ரகுபதி அவர்கள். மிக நீண்ட அரசியல் வரலாறு கொண்டவர்! அமைச்சராக தன்னுடைய பணிகளை சிறப்பாகச் செய்பவர் மட்டுமல்ல; நம்முடைய ஆட்சி மீது பரப்பப்படும் அவதூறுகளை, ஆணித்தரமான வாதங்கள் மூலமாக, ஊடகங்களில் எதிர்கொள்ளும் திறமை படைத்தவர். அரிமளம் ஒன்றியத்தில் புதிய சமத்துவபுரம்; இலங்கைத் தமிழர்களுக்கு புதிய குடியிருப்புகள் என்று ஏராளமான திட்டங்களை தொகுதிக்குக் கொண்டு வந்திருக்கிறார். இவருக்கு நீங்கள் அனைவரும் உதய சூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

### ஆலங்குடிக்கு பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தவர், அமைச்சர் மெய்யநாதன்!

அடுத்து, ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மெய்யநாதன் அவர்கள். நம்முடைய மதிப்பைப் பெற்ற, அமைச்சர். கீழாத்தூர் அரசு கலைக் கல்லூரி–திருவரங்குளம் விளையாட்டு மைதானம் – ஆலங்குடி அறிவுசார் மையம் போன்ற திட்டங்களை, உருவாக்கித் தந்து, மூன்றாவது முறையாகப் போட்டியிடுகிறார். இவருக்கு நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

அடுத்து, விராலிமலை சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கே.கே. செல்லப்பாண்டியன் அவர்கள். வழக்கறிஞர் – புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர். விராலிமலை தொகுதிக்கு நீங்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அரசு கலை, அறிவியல் கல்லூரி உள்ளிட்ட ஏராளமான திட்டங்களைச் செய்து தரப் போகிறவர். இவருக்கு நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் டாக்டர் முத்துராஜா அவர்கள். அரசுப் பணியை விட்டுவிட்டு, மக்கள் பணிக்கு வந்த உழைப்பாளர். கடந்த முறை வென்று, மூடப்பட்ட முத்துலட்சுமி ரெட்டி மருத்துவமனையை பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தவர். புற்றுநோய் சிகிச்சை மையம் கொண்டு வந்திருக்கிறார். இவருக்கு நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் சின்னத்துரை அவர்கள். 12 ஆண்டுகளாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளராக இருந்து, மக்களுக்காக உழைக்கும் உன்னதமான தோழர். விவசாயத் தொழிலாளர்களின் நலனைக் காக்கப் பாடுபடும் தோழர் சின்னத்துரை அவர்களின் குரல், மீண்டும் சட்டமன்றத்தில் ஒலிக்க அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்தில் நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த அருமைத் தம்பி டி. ராமச்சந்திரன் அவர்கள். நம்முடைய முன்னாள் அமைச்சர் என்னுடைய பெருமதிப்பிற்குரிய அருமைச் சகோதரர் சு. திருநாவுக்கரசர் அவர்களின் அருமை மகன். காங்கிரஸ் கட்சியில் பல்வேறு பொறுப்புகளில் இருந்தவர். அறந்தாங்கி தொகுதியில் கடந்த முறையும் வெற்றி பெற்று நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்த ஒரு சிறப்புக்குரிய இளைஞர். தம்பி ராமச்சந்திரனுக்கு, கை சின்னத்தில் நீங்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும். வேட்பாளர்களின் வெற்றி உறுதிதானே? ('உறுதி' என மக்கள் பலத்த குரல்!) மக்கள் உறுதி செய்துவிட்டார்கள், வேட்பாளர்கள் உட்காரலாம்!

நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் – ஒவ்வொரு வட்டத்திற்கும் – ஒவ்வொரு ஊராட்சிக்கும் என்ன தேவை என்று பார்த்துப் பார்த்துச் செய்திருக்கிறோம்.

### புதுக்கோட்டைக்கு கீர்த்திமிகு திட்டங்கள்!

இப்படி, இந்தப் புதுக்கோட்டை மாவட்டத்தை புத்தம் புது கோட்டையாக உருவாக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் திட்டங்கள் சிலவற்றை மட்டும் ஹைலைட்ஸாகச் சொல்ல வேண்டும் என்றால்,

திருமயத்தில் அரசு மருத்துவமனை,

நெல் கொள்முதல் நிலையம்,

ஆலங்குடியில் நெல் கொள்முதல் நிலையம்,

புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி பக்கத்தில், பல் மருத்துவக் கல்லூரி,

புதுக்கோட்டை ராஜகோபாலத் தொண்டைமான் அவர்களுக்கு மணிமண்டபம்,

புதுக்கோட்டை அண்ணா சிலையில் இருந்து, அறந்தாங்கி செல்லும் சாலையில், கீரனூர் வரை ரூ.40 கோடி மதிப்பீட்டில் சாலைகள்,

344 அரசுப் பள்ளிகளில் ஆய்வகங்கள்,

தேவஸ்தானம் கட்டுப்பாட்டில் இருக்கும் 33 திருக்கோயில்களில் திருப்பணிகள் செய்யப்பட்டிருக்கிறது.

255 திருக்கோயில்களின் பராமரிப்புக்கு மானியத்தை உயர்த்தியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, 4 இலட்சம் பேர் பயனடையும் வகையில், ஆயிரத்து 820 கோடி ரூபாய் மதிப்பீட்டில், காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கிறது.

### நமது திட்டங்கள்தான் – இந்தியாவிற்கே, 'பெங்ச் மார்க்'

இப்படி, இன்னும் ஏராளமான திட்டங்கள் இருக்கிறது! இவ்வளவும் செய்து கொடுத்திருக்கும் காரணத்தினால்தான் உங்களிடம் உரிமையுடன் வாக்கு கேட்க வந்திருக்கிறேன்.

நம்முடைய திராவிட மாடல் அரசு செய்திருக்கும் சாதனைகளைப் பற்றி, நிறையச் செய்திகளில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். தி.மு.க. அரசு ஒரு திட்டத்தைச் செயல்படுத்தினால், அது சாதனைத் திட்டமாகத்தான் இருக்கும்! நம்முடைய சாதனைகள்தான் இந்தியாவிற்கே 'Bench-Mark'-காக இருக்கும்! எடுத்துக்காட்டுக்குச் சொல்கிறேன்.



### ஹைலைட்?

**இங்கு இருக்கும் மகளிரைக் கேட்கிறேன்… உங்கள் அண்ணன் இந்த ஸ்டாலின் கொடுக்கப் போகும் கூப்பன் எவ்வளவு? (''எட்டாயிரம் ரூபாய்'' என, மக்கள் குரல்!) மகளிர் எல்லாம் இப்போதே வீட்டுக்கு என்ன பொருள் வாங்கலாம் என்று 'டிஸ்கஸ்' பண்ண ஆரம்பித்து விட்டார்கள்! இந்தத் திட்டத்தில் எவ்வளவு தொகையோடு கூப்பன் தரப் போகிறோம்! எட்டாயிரம் ரூபாய்க்கு கூப்பன்! இந்தக் கூப்பனை வைத்து, உங்களுக்குத் தேவைப்படும் வீட்டு உபயோகப் பொருளை, புதிதாகவும் வாங்கிக் கொள்ளலாம்; இல்லை என்றால், பழைய பொருளை 'எக்ஸ்சேஞ்ச்' செய்து புது பொருளையும் வாங்கிக் கொள்ளலாம்! உங்களுக்குப் பிடித்த கடையில் உங்களுக்குப் பிடித்த 'பிராண்ட்''–ஐ வாங்கிக் கொள்ளலாம்! வீட்டுக்காரரிடமெல்லாம் கேட்காதீர்கள். ஏதாவது கேட்டு முறைத்தார்கள் என்றால், அண்ணனிடம் சொல்லிவிட்டேன் என்று நீங்கள் சொல்லிவிடுங்கள். (கை தட்டல்) உங்கள் இஷ்டம், உங்கள் சாய்ஸ்.**

தொடர்ச்சி 8–ஆம் பக்கம்